# மனிதாபிமான அடிப்படையில் உள்வந்தோருக்கான Crisis Payment (நெருக்கடிக்கால வழங்கீடு)



We speak your language ☎ 13 1202

*Crisis Payment for Humanitarian Entrants* - **Tamil**

## மனிதாபிமான அடிப்படையில் உள்வந்தோருக்கான Crisis Payment என்பது யாது?

மனிதாபிமான அடிப்படையில் புதிதாக உள்வந்தோருக்கு தமது உடனடி குடியிருப்புத் தேவைகளுக்காக வழங்கப்படும் ஒற்றை வழங்கீடே Crisis Payment (நெருக்கடிக்கால வழங்கீடு) எனப்படும்.

## இவ்வழங்கீட்டைப் பெற முடியுமானோர் யாவர்?

அவுஸ்திரேலியாவிற்கு முதன்முறையாக வருவதற்கு முன்பதாக Australian Humanitarian Visa (அவுஸ்திரேலிய மனிதாபிமான விசா) ஒன்று வழங்கப் பெற்றவர்களுக்கு மட்டுமே இவ்வழங்கீடு கிடைக்கும். Crisis Payment - ஐப் பெறுவதற்கு ஒருவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்:

- Centrelink ஓய்வூதியமொன்றை அல்லது நிதியுதவியைப் பெறுவதற்கு தகுதியுடையவராக இருத்தல்.
- கோரும் நாளில் கடுமையான நிதி நெருக்கடியில் இருத்தல்.
- கோரும் நாளில் அவுஸ்திரேலியாவில் இருத்தல் வேண்டும்.
- பின்வரும் தகுதியளிக்கும் மனிதாபிமான விசா ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்:
  - Subclass 200–Refugee (உபபிரிவு 200 – அகதி)
  - Subclass 201–In-Country Special Humanitarian (உபபிரிவு 201 – நாட்டினுள் சிறப்பு மனிதாபிமானம்)
  - Subclass 202–Global Special Humanitarian (உபபிரிவு 202 – பூகோல சிறப்பு மனிதாபிமானம்)
  - Subclass 203–Emergency Rescue (உபபிரிவு 203 – அவசரகால மீட்பு) **மற்றும்,**
  - Subclass 204–Woman at risk (உபபரிவு 204 – ஆபத்திலுள்ள பெண்)
- **தகுதியான ஒரு மனிதாபிமான விசாவுடன் முதன்முதலாக அவுஸ்திரேலியாவிற்குள் வந்து சேர்ந்த ஏழு நாட்களுக்குள் கோர வேண்டும்** (அல்லது கோரும் நோக்கத்துடன் Centrelink ஐ ஏழு நாட்களுக்குள் தொடர்புகொள்வதோடு, தொடர்பு கொண்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கோரலை முன்வைத்தல் வேண்டும்), **அத்துடன்**
- 2008 ஜனவரி 1 இல் அல்லது அதற்குப் பின் முதன்முதலாக அவுஸ்திரேலியாவை வந்தடைந்திருத்தல் வேண்டும்.

## Crisis Payment எவ்வளவு?

Crisis Payment தொகையானது ஒருவரின் ஒருவார அடிப்படை Centrelink ஓய்வூதிய வழங்கீட்டிற்கு அல்லது நிதியுதவிக்கு (Rent Assistance (வாடகை உதவி) அல்லது Pharmaceutical Allowance (மருந்துக்கான கொடுப்பனவு) ஆகிய கூட்டுத்தொகைகள் தவிர்ந்த) சமமாகும். இது வழமையான இரு வார வழங்கீட்டுக்கு மேலதிகமான ஒற்றை வழங்கீடாகும்.

## Hardship Advance (கஷ்டகால முற்பணம்)

மனிதாபிமான அடிப்படையில் புதிதாக வந்தோர் தகுதி பெற்றிருப்பின் அவர்களுக்குரிய ஓய்வூதியத்தின் அல்லது நிதியுதவியின் முதற் தவணை வழங்கீட்டின் ஒரு பகுதியை முற்பணமாகப் பெறுவதற்கும் விண்ணப்பிக்கலாம். இது Hardship Advance (கஷ்டகால முற்பணம்) எனப்படும்.

## பொறுப்பு மறுப்பு

இவ்வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் 2008 பெப்ரவரியில் மிகச் சரியானதாக இருக்கும் அதேவேளை நிச்சயமாக அவை மாற்றமடையவும் இயலும். இத்திகதியின் பின் நீங்கள் இவ்வெளியீட்டைப் பயன்படுத்துவதாயின், இத்தகவல்கள் புதிப்பிக்கப்பட்டவையா என Centrelink உடன் சரிபார்த்துக்கொள்ளவும்.

Centrelink உடன் தமிழில் பேசுவதற்கு **13 1202*** இல் அழைக்கவும்.
**www.centrelink.gov.au** இணைய தளத்தில் உங்கள் மொழியில் தகவல் பெறலாம்.

** உங்கள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து Centrelink ஐ "13" இல் ஆரம்பமாகும் தொலைபேசி இலக்கங்களில் அழைப்பதற்கான கட்டணம் உங்களது தொலைபேசிச் சேவை வழங்குநரைப் பொருத்து வேறுபடும். உங்கள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து "1800" இல் ஆரம்பமாகும் இலக்கங்களுக்கு அழைத்தல் இலவசமாகும். பொது மற்றும் செல்லிடத் தொலைபேசி அழைப்புகளுக்கு அதிகரித்த வீதத்தில் கட்டணம் அறவிடப்படும்.*